# இமாம்
# ஹஸன் இப்னு அலீ அல்அஸ்கரீ
# அலைஹிஸ்ஸலாம்

**அறிமுகம்**

**பெயர்:**

அபூ முஹம்மது ஹஸன் இப்னு அலீ அல் அஸ்கரீ

**ஜனனம்:**

ஹிஜ்ரி 232, இராக் தேச ஸாமர்ரா நகரம்.

**தந்தை:**

பத்தாவது இமாமாக விளங்கிய ஹஸரத் ஹாதீ அலைஹிஸ் ஸலாம்.

**தாய்:**

கண்ணியமும் இறையச்சமும் மிக்க அன்னை ஹுதைஸா (சூஸன் அம்மையார் எனவும் அழைக்கப்படுகிறார்.)

**வேறு பெயர்கள்:**

சாமர்ரா நகரில் அஸ்கர் * எனுமிடத்தில் வசித்து வந்ததால் - அஸ்கரீ - எனவும் அல் ஸக்கீ, அபூ முஹம்மத் அன்னக்கீ, என்ற பெயர்களிலும் அழைக்கபட்டார்.

**இமாமத்:**

தந்தை பத்தாவது இமாம் ஷஹீதாகும் போது வயது இருபத்து இரண்டு தனது இருபத் தெட்டாவது வயதாகும் வரை சுமார் ஆறு வருடங்கள் இமாமத்தை ஏற்றி வழிநடத்தினார்

**மரணம்:**

ஹிஜ்ரி 260ம் ஆண்டு தமது 25வது வயதில் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

**ஆளுமை:**

கோதுமை நிறமான பளபளப்பான உடம்பு, விசாலமான முகமும் கண்களும், வசீகரமான தோற்றம்.

**ஆட்சியாளர்:**

பதினோராவது இமாம் தன் வாழ்வில் ஆறு ஆப்பாசிய கலீபாக்களைச் சந்தித்தார். முதவக்கில்,முன்தஸிர், முஃதஸ், முஹ்ததீ, முஃதமத் ஆகியோர். இறுதியாக முஃதமதின் ஆட்சிக் காலத்தில் ஷஹீதாக்கப்பட்டார். (1)

**வாரிசு:**

அன்னாரின் ஷஹாதத்தினைத் தொடர்ந்து இறுதி இமாமும் பூமியில் அல்லாஹ்வின் இறுதி அத்தாட்சியுமான இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் இமாமத் பொறுப்பை

ஏற்கிறார். அன்னார் -அவரது பாதத்தில் நம் உயிர்கள் அர்ப்பணமாகட்டும்- வெளியுலகுக்குத் தெரியாமல் மேகத்திடைப்பட்ட கதிரவன் போல மறைந்து வாழ்கிறார். நாம் வாழும் இக்காலத்திலும் அன்னார் உயிர் வாழ்கிறார் என்பதும் அவரே நாம் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்ட நமது யுகத்து இமாம் என்பதும் நாம் நம்புகின்ற உண்மைகளாகும்.

இமாமத்

நமது இமாம்கள், முதலாவது முதல் இறுதியானவர் வரையுமான இமாம்களின் பெயர் விவகாரங்கள் அடங்கிய றிவாயத்துகளோடு மட்டும் நின்று விடவில்லை. ஒவ்வொரு இமாமும் தமக்குப் பின்னால் அப்பொறுப்பைக் கையேற்பவர் யார் என்பதை தம் தோழர்களுக்கும் நேசர்களுக்கும் மிகத் தெளிவாக அறிவித்து அடையாளப்படுத்திக் காட்டுவதை வழமையாகக் கொண்டிருந்தனர். இதன் மூலம் இது சம்பந்தமாக சந்தேகங்களை தோன்றுவதற்கோ உருவாக்குவதற்கோ உள்ள வாய்ப்புகள் களையப்படும். இமாம் அஸ்கரீயின் இமாமத் பற்றியும் நிறையவே றிவாயத்துகள் உள்ளன.

அபூ ஹாஷிம் ஜஃபரீ - இவர் இமாம்களின் மிக நெருங்கிய சீடரும் மிக விசுவாசமான றாவியும் ஆவார் - கூறுகிறார் :

இமாம் அஸ்கரீயின் தந்தை கூறுவார் : “எனக்குப் பின்னர் எனது மகன் ஹஸன் இமாம் ஆவார். அவருக்குப் பிறகு யார் என உங்களுக்குத் தெரியுமா ? அவரை நீங்கள் காணமாட்டீர்கள். அவரது பெயரைக் கூட உச்சரிப்பது முறையல்ல. அவரை முஹம்மது நபிகளாரின் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி பரம்பரையில் உதித்த அத்தாட்சி என அழையுங்கள்.” (2)

ஸகர் இப்னு அபூ தல்ப் கூறுகிறார்:

இமாம் ஹாதீ அலைஹிஸ்ஸலாம் பின்வருமாறு கூறக் கேட்டிருக்கிறேன். “எனக்குப் பின்னர் எனது புதல்வர் ஹஸன் இமாம் ஆகிறார். அவருக்குப் பின்னர் அவரது மகனாகிய காயிம் மஹ்தி இமாம் ஆவார். அவர் அநீதியால் இருண்டிருந்த பூமியை நீதியால் நிரப்பி ஒளிமயமாக்குவார்.” (3)

நவ்பலீ சொல்கிறார்:

ஒரு முறை இமாம் ஹாதீயுடன் வீட்டு முன்னால் அமர்ந்திருந்தோம். அப்போது அவரது புதல்வர் முஹம்மது; அவ்விடத்தால் சென்றார். நான் அவரைக் காட்டி 'எமது அடுத்த இமாம் இவர் தானா?”என விசாரித்தேன்.

அதற்கு இமாம்: “இல்லை, இவர் அன்று எனது மகன் ஹஸன் தான் அடுத்த இமாமாக இருப்பார்”எனக் கூறினார். (4)

யஹ்யா இப்னு யஸ்ஸார் கன்பரீ கூறுகிறார்:

“இமாம் ஹாதீ அலைஹிஸ் ஸலாம் தமது மரணம் சம்பவிப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே, புதல்வர் ஹஸனைச் சுட்டிக் காட்டி, இவரையே இமாமாகப் பின்பற்றுங்கள் என உபதேசம் புரிந்தார்கள். அப்போது மவாலிகள் பெருந்தொகையானோர் என்னுடன் இருந்தனர்.' (5)

அபூ பக்ர் அல் பஹ்பக்கீ சொல்கிறார்:

இமாம் அல் ஹாதீ அலைஹிஸ் ஸலாம் எனக்கு பின்வருமாறு எழுதியிருந்தார்: 'எனது புதல்வர் அபூ முஹம்மத் ஹஸன் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் நபியின் குடும்பத்தில் மிகச் சரியான இயல்பையும் மிக விசுவாசத்துக்குரிய அத்தாட்சியையும் கொண்டவர் ஆவார். எனது பிள்ளைகளில் பெரியவர் அவரே. என்னைத் தொடர்ந்து வருபவர் அவர் தான். எமது பொறுப்புகள் அவரையே சென்றடையும். ஆகவே நம்மிடம் நீர் கேட்டுத் தெரிந்தது போல, இனிமேல் அவரிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்'. (6)

ஆட்சியாளர்கள்

ஆறு வருடங்களே நீண்டிருந்த தமது மிகக் குறுகிய கால இமாமத்தின் போது, அப்பாசிய மன்னர்கள் மூவர் ஆட்சி செலுத்தினர். அவர்கள் முஃதஸ், முஹ்ததீ மற்று முஃதமித் ஆகியோர் ஆவர்.

முஸ்தயீனிடம் இருந்து ஆட்சியைப் பறித்தெடுத்தார் முஃதஸ். அவரது ஆட்சியில் இமாம் ஹாதீ கொல்லப் பட்டார். முஃதஸ்ஸின் ஆட்சியில் கொல்லப்பட்ட ஹாஷிமீக்களின் தொகை ஏராளம்.

அவரது கொடுமைக்கு உதாரணமாக தன் சகோதரன் முஅய்யிதுக்கு இழைத்த கொடூரங்களையே கூறலாம். முடிக்குரிய வாரிசு என்ற அந்தஸ்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு வலியுறுத்தி அவரைச் பாதாளச் சிறையில் அடைத்து நாற்பது கசையடியும் வழங்கினார்.

இராணுவத்தைச் சேர்ந்த துருக்கிய -மமாலீக்- சிப்பாய்கள் முஅய்யிதைச் சிறையில் இருந்து மீட்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகக் கேள்வியுற்ற முஃதஸ், தம்பியைக் கொலை செய்ய உத்தரவிட்டார். அதன் பிரகாரம் அவரது உடலின் ஒரு பகுதியை நஞ்சூட்டப்பட்ட போர்வையால் போத்தினார். அந்த நஞ்சை அவர் சுவாசிக்குமாறு செய்து, அதன் மூலம் அவர் கொல்லப்பட்டார். பின்னர், நீதிபதிகள் சட்ட அறிஞர்கள என்போரை அழைத்து, முஅய்யிதின் உடலைப் பார்வைக்கு வைத்தனர். இது இயற்கை மரணமே என அவர்களும் சாட்சி சொல்ல வேண்டியதாயிற்று. (7)

ஜஃபர் இப்னு அபீ தாலிப், அகீல் இப்னு அபீ தாலிப் போன்றோரின் குடும்ப அங்கத்தவர்கள் பெரும்பாலானோர் இவரது கட்டளையின் பிரகாரம்; கைது செய்யப்பட்டனர். ஹிஜாஸ் மாகாணத்தில், ஆட்சியை எதிர்த்தார்கள் என்பது அவர்கள் மீதான குற்றச்சாட்டு. அவர்கள் அங்கிருந்து ஸாமர்ராவுக்குக் கொண்ட வரப்பட்டனர். (8)

இமாம் அஸ்கரியின் நேசர்களைப் பொறுத்த வரை வாழ்க்கை மிக இருண்டு விட்டது. நெருக்கடிகளும், இன்னல்களும் தாங்கொணா நிலைக்கு மோசமடைந்தது. இமாமுக்கு அவர்கள் எழுதிய கடிதமொன்றில், இதற்கு முடிவே கிடையாதா? என அங்கலாய்த்தனர். இமாம், மூன்றே நாட்களில் தொல்லைகள் தொலைந்து விடும் என பதில் வரைந்து ஆறுதல் வழங்கினார். (9)

முஃதஸ்ஸின் இராணுவத்தில் இருந்த துருக்கிய மமாலீக்குகள் கலீபாவுக்கு எதிராக புரட்சி செய்தனர். அவரைப் பதவியில் இருந்து கவிழ்த்து நையப் புடைத்தனர். தண்ணீர் களஞ்சியமொன்றுல் தள்ளி கதவையும் அடைத்து விட்டனர். முஃதஸ் அங்கேயே உயிர் துறந்தான்.(10)

முஃதஸ்ஸின அழிவோடு, முஹததீ ஆட்சிக்கு வந்தார். உலகப் பற்றற்ற நீதியான ஆட்சியாளராக தன்னைக் காட்டிக் கொள்ள மிகவும் பிரயத்தனப்பட்டார். பகிரங்க கேளிக்கைகளைத் தவிர்ந்து கொண்டார். நடன, இசை மாதர்களை அரசவையில் இருந்து விலக்கி வைத்தார். மேலும் பல மோசமான பழக்கங்களை ஒளித்துக் கட்டுவதாகக் காட்டிக் கொண்டார். அடக்கி ஒடுக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதாகவும் பெரிதகாகக் கூறினார். எனினும், இமாம் அஸ்கரீயின் சிறை வாழ்வில் மாற்றம் ஏற்படவில்லை அன்னாரைத் தீர்த்துக்கட்டுவதாகத் தீர்மானித்த போதும் அதனை நிறைவேற்ற முன்னரேயே முஹ்ததீ மறுவுலகு சென்றார்.

அவரது ஆட்சியில் நபிகாளரின் பரம்பரையினரில் பெரும் தொகையானோர், ஆட்சியை எதிர்த்ததற்காக கைது செய்யப்பட்டு பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் அங்கேயே தமது இறுதி மூச்சையும் விட வேண்டியதாயிற்று.

அஹ்மத் இப்னு முஹம்மத் கூறுகிறார்:

'நான் இமாம் அஸ்கரீக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு எழுதினேன். அப்போது முஹ்ததியின் கவனம் முழுவதும் இராணுவத்தில் புரட்சி செய்து கொண்டிருந்த துருக்கிய மமாலீக்குகளை அடக்குவதிலேயே கழிந்தது. 'நம்மை விட்டு விட்டு கவனம் செலுத்த வேண்டிய வேறு வேலையை அவருக்குக் கொடுத்த இறைவனுக்கே புகழனைத்தும். பூமியில் இருந்து நம்மைத் துடைத்தெறிவதாகவும் கூறுகிறானே' எனக் குறிப்பிட்டேன்.

இமாம் சொந்தக் கையெழுத்தில் அனுப்பிய பதிலில் குறிப்பிட்டிருந்தார். 'அவருக்கோ -கலீபா- வயது கம்மி. இன்றில் இருந்து ஐந்து நாட்கள் எண்ணிக் கொள். ஆறாவது நாள் அவர் மிக கேவலமாகக் கொல்லப்படுவார்'

இமாம் எழுதிய பிரகாரமே சம்பவங்கள் நடந்தேறின. (11)

முஹ்ததீயின் கொலையைத் தொடர்ந்து முஃதமித் ஆட்சிபீடம் ஏறினார். (12)முன்னைய ஆட்சியாளர்களைப் போன்றே முஃதமிதுக்கும் கேளிக்கையும் உல்லாசமும் அடக்குமுறையும் தவிர வேறெதுவும் முக்கியத்துவம் பெறவில்லை.

அவரைக் கூத்திலும் கொட்டத்திலும் விட்டு விட்டு ஆட்சி விவகாரங்களை சகோதரரான முவப்பக் தான் கவனித்து வந்தார்.

முஃ;தமித் பெயரளவிலேயே ஆட்சியாளராக இருந்தார். முவப்பக்கின் மறைவோடு, அரச கருமங்களை முஃதமிதின் மகன் முஃதழித் பொறுப்பேற்றார். இறுதியில் ஹிஜ்ரி 279ல் முஃதமித் மரணித்த போது முஃதழித் உத்தியோக பூர்வமாக அரசர் ஆனார். (13)

இமாம் அஸ்கரீயையும் முஃதமிதே கொலை செய்தார். மேலும் பெரும் தொகையான அன்னாரது உறவினர்கள் மற்றும் நேசர்களும் கொலை செய்யப்பட்டனர். பலர் மிகக் கொடூரமான முறையில் கொலையுண்டனர்.. அவர்களது உடம்பைக் கூட துண்டு துண்டாகத் தறித்து மகிழ்ந்தார் முஃதமித்.(14)

முஃதமிதின் கொலைக்களம் விசாலமானது. ஆட்சிக்கு எதிரான எல்லா வித எதிர்ப்புகளும் வன்முறையைக் கொண்டே முறியடிக்கப்பட்டன. அவரது ஆட்சியில் மட்டும் ஐந்து லட்சம் பேர் கொல்லப் பட்டதாக வரலாற்று அறிஞர்கள் கூறுவர். (15)

பரிசுத்த இமாம்களுக்கு மக்கள் அளித்து வந்த மதிப்பும், இமாம்கள் விட்டுக் கொடுக்காது நடந்து கொண்டமையும் ஆட்சியாளர்களின், உள்ளங்களில் கோபத்தையும் துவேசத்தையும் உருவாக்கின.

ஒரு முறை இமாம், ஸாலிஹ் இப்னு வஸீப்பீனின் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு கடுமையான நெருக்கடிகளைக் கொடுக்குமாறு முஹ்ததீ பணித்தார்.

ஸாலிஹ் கூறுகிறார்: நான் என்னிடமுள்ள மிகக் கோரமான மனிதாபிமானமற்ற இரண்டு காவலாளிகளை நியமித்தேன். அவர்களோ சில நாட்களில் தொழுகையிலும்; நோன்பு வைப்பதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். பிறகு, அவர்களிருவரையும் வரவழைத்து விசாரித்தேன்.‘அவரைக் கொடுமைப்படுத்த அனுப்பினால் நீங்கள் என்னவோ செய்கிறீர்களே’. அவர்கள் கூறினார்கள் : ‘பகலில் நோன்பிருந்து இரவில் வணங்குகின்ற ஒரு நல்ல மனிதர், அவரைப் பற்றி என்ன சொல்வது? அதிகம் கதைக்க மாட்டார். அவர் நம்மைப் பார்த்து விட்டால் எமது உடல் உள்ளம் எல்லாமே நடுக்கம் பிடித்து விடும். நம்மை நாம் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும்’ (16)

பின்னர் நிஹ்ரீர் என்பவரின் பாதாளச் சிறைக்கு இமாம் கொண்டு வரப்பட்டார். அங்கு கொடுமைகள் தொடர்ந்தன. ஒரு முறை நிஹ்ரீரின் மனைவி தன் கணவரிடம் சொன்னாள்: ‘நீர் அல்லாஹ்வை பயந்துகொள். நீ சிறையில் வைத்து தொல்லை கொடுப்பவரின் மகத்துவத்தை நீ அறிய மாட்டாய். இது போதும்’ எனக் கூறி இமாமின் மகிமைகளை விபரித்தாள்.

அதற்கு நிஹ்ரீர் 'நான் அவரை மிருகக் கூண்டினுள் தள்ளி விடுவேன். அப்போது உண்மையைப் பார்க்கலாம்' என்றார். கலீபாவிடமிருந்தும் அதற்குரிய அனுமதியைப் பெற்றான்.

பாரியதொரு மிருகக் கூண்டில் இமாமை வைத்து மூடிவைத்தான் நிஹ்ரீர், அவை அவரைக் குதறிச் சாப்பிடுவதைக் காண ஆவல் கொண்டான்.

அவர்கள் அவதானித்த போது கூண்டின் நடுவே இமாம் அமைதியாக தொழுது கொண்டிருந்தார்கள். மிருகங்கள் அவரைச் சூழ அமைதியாக உட்கார்ந்திருந்தன. உடனடியாக அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல உத்தரவிட்டான். (17)

மு:ஃதமிதுடைய ஆட்சியில் இமாம் அஸ்கரீ அன்னாரது சகோதரர் ஜ:ஃபருடன், அலீ ஜர்ரீனின் சிறையில் அடைக்கப் பட்டனர். மு:ஃதமித் அலீயிடம் அடிக்கடி இக்கைதிகளின் செய்திகளை விசாரித்துக் கொள்வார். அப்போதெல்லாம், அவர் பகலில் நோன்பு நோற்று இரவில் வணக்கம் புரிகிறார் என்றே பதில் வரும்.

ஒரு நாள் அவ்வாறே மு:ஃதமித் கேட்க அலீயும் வழமையான பதிலைக் கூறினான். ‘அவரை வீட்டில் கொண்டு போய் விட்டு விடு’ என மு:ஃதமித் கட்டளையிட்டார்.

அலீ கூறுகிறார்: ‘நான் சிறைவாசலுக்கு வந்தேன். அங்கிருந்த கடிவாளமிடப்பட்ட கழுதையொன்றை எடுத்துக் கொண்டு இமாமைக் காணச் சென்றேன். இமாம் சீராக ஆடையும் தலைப்பாகையும் அணிந்து தயாராக இருந்தார். என்னைக் கண்டதும் எழுந்தார். விடுதலை பற்றி கடிதத்தை அவரிடம் கொடுத்தேன்.

அவர் வெளியே வந்து கழுதையின் மீது ஏறினார். எனினும் பிரயாணிக்காமல் நின்று விட்டார். நான் கேட்டேன்.

'ஏன் தாங்கள் நிற்கிறீர்கள'; ?

'ஜ:ஃபர் வரும் வரை' இமாம் சொன்னார்.

'உங்களை மட்டுமே விடுவிக்க உத்தரவு'.

'நாங்கள் ஒரே வீட்டில் இருந்து ஒரே நேரத்தில் கொணரப்பட்டோம்,அவர் இன்றி நான் மட்டும் வெளியேறுவது முறையல்ல நீர் சென்று உத்தரவு பெற்று வா'.

நான் போய் உத்தரவோடு திரும்பி வந்து சொன்னேன். 'ஜ:ஃபரை விடுதலை செய்துவிட்டேன். ஜ:ஃபரை தனக்கும் உங்களுக்கும் எதிராக செயற்பட்டதாலேயே கைது செய்ததாக கலீபா சொல்லுகிறார்,’

இமாம் எதுவும் சொல்லவில்லை. நான் வழிவிட்டேன். அவர் ஜ:ஃபரை அழைத்துக் கொண்டு வீடு சென்றார். (18)

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் மற்றும் தகவல்களில் இருந்து, இமாம் கடுமையான நெருக்கடிகளை அனுபவித்து வந்தமை தெளிவாகிறது. ஒன்றில் சிறையில் இந்தார் அல்லது கடுமையான கண்காணிப்பின் கீழ் காணப்பட்டார். வீட்டில் இருக்கும் போதும் அவரைச் சந்திப்பது மிகக் கடினமான விடயமாக இருந்தது. கஷ்புல் :ஃகும்மாவில் இவ்வாறு கூறப்படுகிறது :

அபுல் காஸிம் அறிவிக்கிறார் : சாமர்ராவில் இருந்த இமாமின் நேசர் ஒருவர், வியாபார நோக்கில் கஸ்வீன் சென்றிருந்தார். அவரைச் சந்தித்த அப்பிரதேச நேசர் ஒருவர், 'சாமர்ராவில் இமாமின் நிலைமை என்ன?| என விசாரித்தார். வந்தவரோ தனக்கு ஒன்றுமே தெரியாது எனச் சாதித்தார். பின்னர் இமாம் இருக்குமிடம் போகும் முறை போன்ற தகவல்கள் தெரிந்து வைத்துள்ளமையைக் கண்டு கொண்டார்.

'நான் உனக்கு ஐம்பது திர்ஹாம்கள் தருகிறேன். இதைப் பெற்றுக் கொண்டு என்னுடன் வாரும். சாமர்ராவில் இமாமிடம் அழைத்துச் செல்லும் ' என்றார்.

வந்தவரும் இணங்க, அவருடனே சென்று இமாமைக் கண்டார். (19) இமாமைச் சந்திப்பதற்கு கூட திட்டம் தீட்டி அகப்படாமல் செல்ல வேண்டிய அளவுக்கு நிலைமை கடுமையாக இருந்தது.

ஆளுமைச் சிறப்பு

இமாமின் பரிபூரணமான நற்குணங்களும் ஆன்மீக பரிபக்குவமும், அன்னாரது நேசர்களை மட்டுமன்றி பகைவரகளையும் மண்டியிட வைத்தன.

ஹஸன் இப்னு முஹம்மத் அஷ்அரீ மற்றும் முஹம்மத் இப்னு யஹ்யா போன்றோர் அறிவிக்கின்றார்கள்:

அஹ்மத் இப்னு உபைதுல்லாஹ் இப்னு ஹாகான் வரிப்பணம் அறவிட கும் நகர் வந்திருந்தார். இமாமையும் நபிகளாரின் அஹ்லுல் பைத் பரம்பரையினரையும் கடுமையாக எதிர்ப்பவர். அவருடைய சபையில் அலவியாக்கள் பற்றிய பேச்சு வந்த போது ஹாகான் சொன்னார்:

“சாமர்ராவில் வாழுகின்ற ஹஸன் இப்னு அலீ அஸ்கரீ போன்று அறிவிலும் பண்பிலும் மகத்துவத்திலும் அமைதியிலும் ஒழுக்கத்திலும் தலைசிறந்த ஒருவரை நான் கண்டதில்லை. அவருடைய ஹாசிமியக் குலத்தவர்களில் அவரே சிறந்தவர். அன்னாரை விட வயதில் மூத்தவர்கள் கூட கண்ணியப் படுத்துகின்றனர். தளபதிகள் அமைச்சர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் கூட அன்னாருக்கு மதிப்புக் கொடுக்கின்றனர்.

“நான் ஒரு முறை எனது தந்தையுடன் அவரது அவையில் அமர்ந்திருந்தேன். அவர் ஓர் அமைச்சரும் மமாலீக்குகளின்- துருக்கியரின் தலைவரும் ஆவார். அங்கு வந்த ஒரு காவலாளி,தந்தையிடம் 'ஆபூ முஹம்மத் இப்னு றிழா| வருகிறார் எனக் கூறினார். தந்தையும் சப்தமிட்டு'அவரை அழைத்து வா'எனக் கட்டளையிட்டார்.

“தந்தையின் முன்னிலையில், கலீபா தவிர யாரும் யாரையும் குடும்பப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. அப்படி அழைப்பது அழைக்கப்படுவரை கண்ணியப்படுத்துவதாகும்.

அப்போது அழகிய முகமும் வசீகர தோற்றமும் ஒளிபொருந்திய உடம்பும் கொண்ட ஓர் இளைஞர் உள்ளே நுழைந்தார். எனது தந்தை எழுந்து சென்று அவரை வரவேற்றார். எனது தந்தை வேறு யாருக்கும் அத்தகைய சங்கையைச் செய்ததை நான் கண்டதில்லை. அவரது கையிலும் நெஞ்சிலும் முத்தமிட்டு அவரை கட்டித் தழுவினார்.

தான் உட்காந்திருந்த விரிப்பில் அவரை அமர வைத்தார். அவரின் முன்னிலையில் தாழ்மையாக உட்கார்ந்தார். எனக்கு இது மிக்க வியப்பைத் தந்தது.

அப்போது ஒரு காவலாளி வந்து, முவப்பக் வந்திருப்பதாக அறிவித்தான். முவப்பக் வந்தால் தந்தை தமது அதிகாரிகள், தளபதிகள் சகிதம் முன்னே சென்று வரவேற்று அழைத்து வருவது வழக்கம். ஆனால் இம்முறை அவர்களை நோக்கி, 'இவரைக் கண்டு கொள்ள முன் முவப்பகை மறுபக்கமாக அழைத்துச் செல்லுங்கள்' என்றார். பின்னர் விருந்தாளி போக எழுந்தார். மீண்டும் முத்தமிட்டு கட்டியணைத்து வழியனுப்பினார்.

நான் ஏவலாளர்களிடம் கேட்டேன் : 'எனது தந்தையும் நீங்களும் இப்படி மரியாதை கொடுக்கும் அளவுக்கு அந்த இளைஞனில் என்ன விசேஷம், யாரவர்?"

அவர்கள் கூறினார்கள் : "அவர் தான் இமாம் றிழாவின் பேரர் ஹஸன் இப்னு அலீ. அவர் அலவீக்களின் தலைவரும் பெரும் மகானும் ஆவார்."

எனது வியப்பு மேலும் அதிகரித்தது. நான் இது பற்றி கடுமையாக சிந்திக்கத் தொடங்கினேன்.

இரவு வந்தது. இரவுத் தொழுகையின் பின்னர் தந்தையார் நாளைய கருமங்களைத் திட்டமிடுவதற்கு அமர்வார். நானும் அவருடன் அமர்ந்து 'உங்களுடன் கதைக்கலாமா?' என வேண்டினேன். அவர்'கதைக்கலாமே, என்ன விஷயம்?' எனக் கேட்க நான் நடந்ததைச் சொல்லி காரணத்தை வினவினேன். அவர் சொன்னார்:

'மகனே, அவர் ஷீயாக்களின் தலைவர். அப்பாசியரின் கையில் இருந்து கிலாபத் விடுபட்டால் அதனைக் கையில் எடுக்கும் தகுதி இவர்களுக்கு மட்டுமே உண்டு. பனூ ஹாஷீம்கள் மத்தியில் அறிவிலும் அடக்கத்திலும் ஒழுக்கத்திலும் இறையச்சத்திலும் வேறு எல்லாச் சிறப்புகளிலும் இவரே சிறந்து விளங்குகிறார்."

தந்தையின் இந்த விளக்கம் என்னை மேலும் தூண்டி விட்டது. நான் அரச அதிகாரிகள்,அமைச்சர்கள், பிரதானிகள் என எல்லோரிடமும் ஹஸன் இப்னு அலீ அலைஹிஸ்ஸலாம் பற்றி விசாரிக்கலானேன். எல்லோலும் ஏகோபித்து இதே உயர்வைத் தான் விபரிக்கலாயினர். எல்லோரும் மதிக்கின்ற, எவரையும் பகைக்காத ஒரு சிறந்த மகானை நான் கண்டு கொண்டேன்." (20)

பற்றற்ற வாழ்வு

காமில் இப்னு இப்றாஹீம் அல் மதனீ கூறுகிறார்:

நான் ஒரு முறை இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் அமர்ந்திருந்த இடத்தில் நுழைந்தேன். அவர் மிக அழகிய பளபளப்பான வெள்ளை ஆடையொன்றை அணிந்திருந்தார். 'அல்லாஹ்வின் நேசர் அழகிய ஆடை அணிந்துள்ளார். நம்மையோ இத்தகையவற்றில் இருந்து தடுத்துக் கொள்கிறார். மற்றவரகளுடன் சமத்துவம் பேண வேண்டும் என்கிறார் என என்னுள் நினைத்துக் கொண்டேன்.

இமாம் என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்தவாறே தனது கைகளை என் பக்கம் நீட்டினார். கடின தோலினால் ஆன ஓர் அங்கியை அவர் உள்ளே அணிந்துள்ளமை தெரிந்தது. “இந்த ஆடை இறைவனுக்காக அணிவது. மேலே உள்ளது உங்களுக்காக” என விளக்கினார். (21)

வறியவர் நாடுமிடம்;

ஹஸரத் முஹம்மத் இப்னு அலீ இப்னு இப்றாஹீம் இப்னு மூஸா இப்னு ஜஃபர் அலைஹிஸ் ஸலாம் கூறுகிறார்:

“நம்மை வறுமைவாட்டியது. தந்தை என்னிடம் இமாம் அஸ்கரீயின் தாராளத் தன்மையையும் சிறப்புகளையும் விபரித்து விட்டுச் 'நாம் அவரிடம் போய் வருவோம் ' என்றார்.

நாங்கள் பிரயாணத்தை ஆரம்பித்தோம். இடையில் தந்தை சொன்னார்: ‘தற்போதைக்கு ஐந்நூறு திரஹம் கிடைக்குமெனில் போதுமானது. ஆடையணிகளுக்கு இருநூறையும் கடன்களைச் செலுத்திவிட இருநூறும் செலவுக்கு நூறும் தாராளமாகப் போதுமானது.’ நானும் நினைத்தேன். எனக்கும்; முந்நூறு திரஹம் கிடைக்குமெனில், நூறு திர்ஹமில் ஒரு வாகனம்-கழுதை வாங்கலாம். இன்னொரு நூறை செலவுக்கு வைத்துக் கொண்டு எஞ்சிய நூறு திர்ஹமை எடுத்து கொண்டு ஹமதானுக்குச் சென்று வியாபாரம் செய்யலாம்.’

நாம் இமாமின் வீட்டு வாசலையடைந்த போது, அங்கிருந்த வேலையாள், உள்ளே நோக்கி, ‘இதோ அலீ இப்னு இப்றாஹீம் அவரது மகன் முஹம்மதுடன்’ வருகிறார்கள் என அறிவித்தார். நாம் உள்ளே சென்று முகமன் கூறினோம். இமாமும் முகமன் தந்து விட்டு என் தந்தையிடம், 'ஏன் இவ்வளவு காலமும் நம்மைக் காண வரவில்லை' எனக் விசாரித்தார். தந்தை சொன்னார்:'எஜமானே, இந்த நிலையில் தங்களைக் காண வர விரும்பவில்லை'.

நாம் அங்கிருந்து வெளியேற முற்பட்ட போது இமாமின் ஏவலாள் இரண்டு முடிப்புபளைக் கொண்டு வந்தார், அதில் ஒன்றை என் தந்தையிடம் கொடுத்த இமாம், 'இதில் ஐநூறு திரஹம் உள்ளது. ஆடைகளுக்கு இருநூறும் கடன் கொடுக்க இருநூறும் செலவுக்கு நூறும் வைத்துக் கொள்ளுங்கள்'என்றார்.

பின்னர் என்னிடம் அடுத்த முடிப்பை தந்து, 'இதில் முந்நூறு திர்ஹம் உண்டு. கழுதை வாங்க நூறும் செலவுக்கு நூறும் வியாபாரத்துக்கு நூறும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் ஹமதானுக்குச் செல்லாது இராக் தேச ஸவ்ராக்குச் செல்லுங்கள்' என்றார். (22)

வணக்க வழிபாடு

இமாம் அஸ்கரீயும் அவரது தந்தை, பாட்டனார் போலவே இறை வணக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். தொழுகை நேரம் வந்து விட்டால் எத்தகைய காரியத்தையும்

இடைநிறுத்தி விடுவார். எந்த வேலைக்கும் தொழுகைக்கு மேலால் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

அபூ ஹாசிம் ஜஃபரீ கூறுகிறார்: நான் ஒருமுறை இமாம் அஸ்கரீயைக் காணச் சென்றிருந்தேன். அன்னவர் ஒரு நூலை யாத்துக் கொண்டிருந்தார். தொழுகை நேரம் வந்ததும் அதை அப்படியே விட்டு விட்டு தொழுகைக்காக எழுந்து சென்றார். (23)

இறைவணக்கத்தில் அவர் காட்டிய ஈடுபாடு ஏனையவர்களையும், மிக மோசமான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களைக் கூட திசை திரும்பி சீர்திருந்த வைத்த கதைகள் ஏராளம்.(24)

வழிகாட்டி

அபூ ஹாஷிம் ஜஃபரீ கூறியதாக அஹ்லுல் ஸுன்னா அறிஞரான இப்னு ஸப்பாஃக் அல் மாலிகீ அறிவிக்கிறார் :

இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் சிறைப் பிடிக்கப்பட்டு சில நாட்களே கழிந்தது. நாடு பூராவும் பெரும் வரட்சி ஏற்பட்டது. மழை தேடித் தொழுகை (இஸ்திஸ்கா)நடாத்த மக்களை ஒன்று சேருமாறு முஃதமித் கட்டளையிட்டார். தொடர்ந்து மூன்று நாட்களாக மக்கள் ஒன்று கூடி பிராத்தனை நடாத்தினார்கள். எனினும் மழை வந்தபாடில்லை.

அடுத்த நாள் நஸாராக்கள் தமது மதகுருமாருடன் வரண்ட பாலைவெளியில் கூடி பிரார்த்தனை புரிந்தனர். அவர்களுடன் இருந்த ஒரு மதகுரு வானத்தின் பால் தம் கையை ஏந்த மழை கொட்டத் தொடங்கியது. அவர் கையை எந்திய ஒவ்வொரு முறையும் அவ்வாறே நடந்தது.

இரண்டாவது நாளும் அவ்வாறே திரண்டனர். அம்மதகுரு கையை ஏந்த வானம் கொட்டியது. போதும் போதும் என்று ஆகுமளவுக்கு மழை பெய்தது.

இந்தச் சம்பவம் மக்களை அதிர வைத்தது. அவர்களது உள்ளத்தில் தமது மத நம்பிக்கைகள் பற்றிய ஐமிச்சங்ளையும் தோற்றுவித்தது. கலீபாவுக்கு இது பெரும் தலையிடியாக மாறியது.

இமாம் அஸ்கரீயை சிறையிலிருந்து அழைத்து வருமாறு ஸாலிஹ் இப்னு வஸீபைப் பணித்தார். இமாம் வந்த போது கலீபா சொன்னார் : இந்த நிகழ்ச்சி மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இமாம் சொன்னார்: ‘நாளையும் அவர்களை வந்து பிரார்த்திக்கச் சொல்லுங்கள்’

'யாரும் வரமாட்டார்கள். இப்போதைக்கே போதிய அளவுக்கு மேலால் நீர் கிடைத்துள்ளது.'

'பலவீனமான உள்ளங்கள் குழம்பிப் போயுள்ள நிலைமையை மாற்றி சந்தேக நிவர்த்தி செய்வதற்கு அப்போது சாத்தியமாகும் .'

அடுத்த நாளும் மதகுமாரும் மக்களும் கலீபாவின் கட்டளையின் பிரகாரம் ஒன்று சேர்ந்தனர். மதகுருவும் வந்தார் கையேந்தினார். வானம் இருண்டு சோனாமாரி பொழிந்தது.

மதகுருவின் கையில் ஏதோ இருப்பதாகவும் அதனைக் கைப்பற்றுமாறும் இமாம் கூறினார். அவ்வாறே சோதனையிடப் பட்டது அவரது கையில் இருந்த ஓர் மனித எழும்புத் துண்டை எடுத்து வந்தனர். அதனை வாங்கி ஒரு துணியில் சுற்றி கொண்டார் இமாம்.

மழை நின்றது. மீண்டும் பிரார்த்திக்குமாறு மதகுருவைக் கோரினர். அவர் கையை உயர்த்தினார். பிரார்த்தித்தார். பலன் கிடைக்கவில்லை மாறாக, கூடியிருந்த மேகம் கலைந்தது. வானம் பளிச்சிட்டது. மழையின் அடையாளத்தையே காணவில்லை.

கலீபா இமாமிடம் சங்கதியை விசாரித்தார். இமாம் விபரித்தார்:

'இது ஒ;ர இறைத் தூதரின் எலும்புத் துண்டு. இவர்கள் ஒரு கப்றில் இருந்து பெற்றிருக்கிறார்கள். ஒரு நபியின் எலும்புத் துண்டு எந்தத் திரையும் இன்றி வானத்தின் பால் திறந்திருந்தால் மழை பெய்வது அதிசயமல்ல."

இமாமின் விளக்கத்தை எல்லோரும் ஏற்றதோடு, அவர் கூறியதைப் பரீட்சித்தும் பார்த்தனர். அன்னார் சொன்ன பிரகாரமே நடந்ததைக் கண்டனர்.

மக்களின் சந்தேகம் தீர்ந்தது. இமாம் அஸ்கரீயை அவரது சொந்த வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு கலீபா பணித்தார். (25)

தத்துவஞானியுடன்

இமாமின் காலத்தில் இராக் தேசத்தில் இஸ்ஹாக் அல் கிந்தீ என்ற தத்துவஞானி வாழ்ந்து வந்தார். குரஆனில் ஒன்றுக் கொன்று முரணான கருத்துக்கள் காணப்படுவதாகவும் அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்து புத்தகம் ஏழுதுவதாகவும் கூறி வந்தார்.

பின்னர் எல்லா வேலைகளையும் ஒதுக்கி விட்டு, இந்த நூலை எழுதுவதிலேயே காலத்தைக் கழிக்கலானார்.

அவருடைய சிஷ்யர்கள் சிலர் இமாமைக் காண வந்த போது உங்கள் 'ஆசிரியரை இந்த வேலையைக் கைவிடத் தூண்டும் தகுதி பெற்ற ஒருவர் உங்களில் இல்லையா?| என வினவினார்.

'நாம் அவர்களுடைய சீடர்களல்லவா. எப்படி அவரை எதிர்த்துக் கதைப்பது? ' சீடர்கள் கூறினர்.

'நான் சொல்கிற படி செய்யுங்கள். அவரிடம் சென்று, அவருக்கு பணிவிடை செய்யுங்கள். அவருடன் மிக நெருக்கமும் உங்கள் மீது நல்லெண்ணமும் கொண்டதும் நீங்கள் இவ்வாறு அவரைக் கேளுங்கள்.

'குருவே இந்தக் குர்ஆனை இறக்கியவன் இதனை உங்களிடம் தந்திருந்தால், அவன் இதன் மூலம் சொல்ல விரும்புகின்ற அர்த்தம் நீங்கள் புரிந்து கொண்டிருப்பதை விட வேறுபடும் சாத்தியம் உண்டா' என்று கேளுங்கள். அவர் கற்றறிந்த மனிதர் என்பதால் அதனை ஏற்றுக் கொள்வார். பின்னர், 'இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பதும் கூட கூறப்பட்ட அர்த்தம் அல்லாத மாறான கருத்தாகவும் இருக்கலாம் அல்லவா?" என வினவுங்கள்.

இமாம் சொன்ன பிரகாரம் ஒரு சிஷ்யர் சென்றார். பணிவிடைசெய்தார். நெருக்கம் கிடைத்த ஒரு நாளில் மேற்படி இமாம் சொல்லித் தந்த விடங்களை முன்வைத்தார். குருவானவரும் அதனைத் திருப்பி சொல்லுமாறு பலமுறை பணித்தார். நன்கு சிந்தித்தார். சீடரிடம் சொன்னார் :

'உண்மையைச் சொல் யார் இதனை உனக்கு சொல்லித்தந்தது'

'என் உள்ளத்தில் உதித்ததைச் சொன்னேன் குருவே' என்றார்.

'இல்லை, இவ்வாறு பேசுகின்ற அளவுக்கு நீங்கள் தர்க்கத்தில் உயர் நிலையை இன்னும் அடையவில்லை. உண்மையை கூறும்.'

'எனக்கு இமாம் அபூ முஹம்மத் அஸ்கரீ தான் சொல்லித் தந்தார்.'

'உண்மை சொன்னீர். அந்த வீட்டில் இருந்து தான் இத்தகைய அறிவு வெளிப்படலாம்.'

பின்னர் எழுதிய கட்டுக்களை ஒன்று சேர்த்து நெருப்பில் இட்டு எரித்து விட்டார். (26)

சில பதில்கள்

அபூ ஹாசிம் ஜஃபரீ அறிவிக்கிறார் :

பஹ்பக்கீ என்பவர் இமாமிடம் கேட்டார் : வாரிசுச் சொத்தில் ஆண்கள் இரண்டு பங்கு பெற அப்பாவிப் பெண்ணுக்கு ஒரு பங்கு தானே செல்கிறது. இது நியாயமா ?

இமாம் கூறினார்: ஜிஹாத் செய்து, குடும்பத்தின் செலவுகளைப் பொறுப்பேற்பது, சொந்தகாரன் ஒருவன் கொலை செய்து விட்டால் கொல்லப்பட்டவனின் குடும்பத்துக்கு நஷ்டஈடு கொடுப்பது என பலவேறு பொறுப்புகள் ஆண் மகனின் தலையில் இருக்கிறது. '

இமாமின் இப் பதிலைக் கேட்ட போது, இமாம் ஜஃபர் ஸாதிக்கிடம் இப்னு அபுல் அவ்ஜஉ இதே கேள்வியைக் கேட்க இமாம் ஸாதிக் இதே பதிலைச் சொன்னதை நினைத்துக் கொண்டேன்.

இமாம் அஸ்கரீ என்னைப் பார்த்து: 'நீ நினைப்பது சரி. நாம் அனைவரும் ஒரே பதில் தான் கொடுக்கிறோம். எங்களில் எல்லோரும் - இமாம்கள் - அறிவிலும் ஆற்றலிலும் சமமானவரகள். அமீருல் முஃமினீன் ஹஸரத் அலீ அலைஹிஸ் ஸலாம் எம்மை விடவும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவரை விடவும் மேலானவர்' என்று கூறினார். (27)

ஹஸன் இப்னு ழரீப் கூறினார் :

இமாம் அஸ்கரீக்கு கடிதம் எழுதி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி, அமீருல் முஃமினீன் அலீ அலைஹிஸ் ஸலாம் பற்றி 'நான் யாருக்கு தலைவரோ அவருக்கு இந்த அலீ அலைஹிஸ் ஸலாம் தலைவராவார்' எனக் கூறியதன் அர்த்தம் என்ன?| என விசாரித்தேன்.

அவர் விடை தந்தார் : "இதன் மூலம் நபிகளர், பிரிவினைகள் தோன்றும் போது அல்லாஹ்வின் பொருத்தம் பெற்ற கூட்டம் யார் என்பதைத் தெளிவு படுத்துவதற்கு ஓர் அடையாளத்தை ஏற்படுத்த விரும்பினார்கள்" (28)

காஸிம் அல் ஹரவீ அறிவிக்கிறார் :

இமாமின் விலாயத்து பற்றி சிலரிடையே கருத்து வேறுபாடு உருவாகியுள்ளதால், அதற்கு அத்தாட்சியாக ஏதும் அடையாளம், அத்தாட்சி காட்டித் தருமாறு அஸ்பாத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். இமாம் அலைஹிஸ் ஸலாம் அதற்கு பின்வரமாறு பதில் எழுதினார்கள்.

'நிச்சயமாக இறைவன் அறிவுடையோரையே விளித்துப் பேசுகிறான், இறுதி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி நிகழ்த்தியது போன்ற அற்புதங்களை யாரும் செய்யவில்லை அவரை பெரும் துனியாக்காரர், பொய்யர், மந்திரவாதி எனக் குற்றம் சுமத்தினர்.

"யார் நேர் வழியைத் தேடுகிறாரோ, அதனை அவர் அடைந்து கொள்வார். அற்புதங்கள் சிலரது உள்ளத்தை சமாதானப் படுத்துவது உண்மை. நாமோ இறைவன் அனுமதித்தால் பேசுவோம். தடுத்தால் மௌனம் சாதிப்போம்.

"அல்லாஹ் உண்மை வெளிப்படுவதை விரும்பாதிருந்தால் நபிமார்களை அனுப்பியிருக்க மாட்டான். அவர்களும் நன்மாராயம் கூறுவோராகவோ, எச்சரிப்பவராகவோ, பலமான நிலையிலும் பலவீனத்திலும் உண்மைக்காகப் போராடுவோராகவோ, இறைகட்டளையை நிலைநிறுத்தப் பாடுபடுவோராகவோ இருந்திருக்க மாட்டார்கள்.

"மக்கள் பலவகைப்படுவர் ஒரு கூட்டம் உண்மையை ஏற்று மோட்சத்தின் வழியைக் கடைப்பிடிப்பவர். சத்தியத்தின் அடிப்படை மற்றும் இணை அம்சங்களில் தெளிவான விளக்கம் கொண்டவர். சத்தியத்தைத் தவிர வேறு எங்கும்ம் ஒதுங்காதவர்.

"இன்னொரு கூட்டம், சத்தியத்தை உரியவர்களிடமிருந்து பெற்றவரகள் அல்லர். அவர்கள் கடலில் பிரயாணம் செய்பவர் போன்றாவார். கடல் அசையும் போது அவரும் அசைவார். கடல் அமைதி பெறும் போது அவரும் அமைதி பெறுவார்.

"மற்றைய கூட்டம், சைத்தானின் கையாட்களாக மாறியவர்கள். சத்தியத்தையுடையோரை நிராகரிப்பர். பொறாமை காரணமாக உண்மைகளை பொய்யால் மிகைத்துவிட முயற்சிப்பர். அங்குமிங்கும் சாய்ந்து கொள்வோரோடு இவர்களும் இணைந்து கொள்வர். உண்மையில் ஆடுகளை ஒன்று சேர்ப்பது இடையனுக்கு சுலபமானது.

“விலாயத் பற்றி கருத்து வேறுபாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர். அது உயர்வுக்காகவும் பெருமைக்காகவும் இருந்தால் சந்தேகிப்பதற்கில்லை. இமாமத்தில் அமருகின்றவரே சட்டத் தீர்ப்பு வழங்குவதற்கு முதன்மை அருகதையுடையவர். உன்னை நாடி வருபவரை. உன் பொறுப்பில் உள்ளோரை நன்கு கவனித்துக் கொள். வதந்தி, மற்றும் பதவி ஆசை என்பவை பற்றி உம்மை எச்சரிக்கிறேன். அவை இரண்டுமே அழிவையே தேடித்தரும்.

“நீர் பாரசீகம் செல்வதைப் பற்றி எழுதினாய். நீ செல்லலாம். உமக்கு இறைவன் நன்மையையே தருவான். நீர் மிகப் பாதுகாப்பாக எகிப்தில்; நுழைவீ. அங்க நம்மீது நம்பிக்கை வைத்துள்ளோருக்கு நமது ஸலாத்தைக் கூறுவாயாக. ஆவரகளுக்கு மகத்துவமிக்க இறைவன் மீது பயபக்தி பற்றியும் அமானிதங்களை பேணுவது பற்றியும் போதனை செய். நம்பிக்கைப் பற்றித் தப்பான கதைகளைப் பரபபுவதும் சந்தேகம் கொள்ள வைப்பதும் நமக்கெதிராகப் பேராடுவதாகும். என்பதை அவர்களுக்கு அறிவிக்கவும்.”

அவர் கூறுகிறார் : ‘நீ இன்ஷா அல்லாஹ் பாதுகாப்பாக எகிப்தை அடைவாய்’ என்ற வசனத்தை நான் புரிந்து கொள்ளவே இல்லை. நான் பக்தாதுக்கு வந்த போது பாரசீகம் செல்லும் எண்ணமே இருந்தது. அதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறாததால் எகிப்துக்குச் சென்றேன். (29)

முஹம்மத் இப்னுல் ஹஸன் மய்மூன் கூறுகிறார் :

எனது வறுமை நிலை பற்றி இமாமிடம் முறைப்பாட்டுக் கடிதம் வரைந்தேன். பின்னர் என் உள்ளத்தில் தோன்றியது. ‘இமாம் ஜஃபர் ஸாதிக் பின்வருமாறு கூறினார் அல்லவா? எங்களுடன் வறுமையில் இருப்பது மற்றவர்களிடத்தில் செல்வத்தோடு இருப்பதை விடச் சிறந்தது. எங்களுடன் இருந்து கொல்லப்படுவது பகைவருடன் இருந்து வாழ்வதை விட மேலானது.|

சில நாட்களின் பின்னர் பதில் வந்தது: ‘அல்லாஹ் எமது நேசர்களை, பாவங்கள் அதிகரிக்கும் போது வறுமை கொண்டு சோதித்து பக்குவப்படுத்துகிறான். பின் அதன் மூலம் நிறையப் பாவங்களை மண்ணித்தும் விடுவான்.

“உமது மனதில் தோன்றிய பிரகாரம், எங்களுடன் வறுமையோடு இருப்பதும், கொல்லப்படுவதும், நம் எதிரிகளோடு சொகுசாக வாழ்வதை விடச் சிறந்தது. ஒதுங்க நினைப்பவருக்கு நாம் நல்ல புகலிடம் ஆவோம். நம்மைக் கொண்டு பார்க்க விரும்புவோருக்கு நாம் பிரகாசமான ஒளியாவோம். எம்மைப் பற்றிப் பிடிப்போருக்கு பலமான கொலுகொம்பு ஆவோம். நம்மை விரும்பியோர் உயரிய சுவனபதியில் நம்முடன் இருப்பர். நம்மை விட்டு விலகிச் செல்பவர் நரக நெருப்பை நாடுகிறார்.”(30)

கும் நகரப் பேரறிஞருக்கு எழுதியது

இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் தமது தோழர்களுடன் வைத்திருந்த கடிதத் தொடர்புகளில்,கும் நகரில் வாழ்ந்த ஹதீஸ் கலை வல்லுநர் அலீ இப்னுல் ஹுஸைன் இப்னு பாபவைஹிக்கு எழுதிய இக் கடிதம் பிரதானமானது.

'அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன் அல்லாஹ்வின் திருநாமத்தால். எல்லாப் படைப்பினங்களினதும் ரட்சகனான அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். இறையச்சம் கொண்டோரின் இறுதி முடிவு மிக நல்லதாகும். ஏக தெய்வக் கொள்கையைக் கொண்டோருக்கே சுவனபதி கிடைக்கும். இறைமறுப்பாளரின் வாழிடம் நரகமே. அநியாயக் காரர்களைத் தவிர யாருடனும் பகைமை கிடையாது. அல்லாஹ்வைத் தவிர இறைவன் இல்லை. அவன் சிறந்த சிருஷ்டிகர்த்தா.

"படைப்புகளில் தலைசிறந்த நபிகளார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி மீதும்;அன்னாரின் பரிசுத்த குடும்பத்தார் மீதும் சோபனம் உண்டாகட்டும்.

"எனவே நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் பாத்திரமான பேரறிஞர் அபுல் ஹஸன் அலீ இப்னுல் ஹுஸைன் கும்மீ அவரகளே. அலலாஹ் உங்களை அவனது பூரண திருப்திக்குரியவராக ஆக்குவானாக. அவனது அருளால் தங்களது பரம்பரையில் ஸாலிஹான பிள்ளைகளைத் தருவானாக. இறையச்சம், தொழுகை, ஸக்காத் போன்றவை பற்றி நான் போதிக்கிறேன். ஸக்காத் கொடுக்காதவனின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. தப்புகளை மன்னிப்பது, கோபத்தை அடக்குவது, உறவுகளைப் பலப்படுத்துவது, சகோதரர்கலோடு சமத்துவம் பேணுவது, அவர்களது கஷ்ட நஷ்டங்களில் பங்கெடுப்பது, அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அறிவில் குறைந்தோருடன் பொறுமை பேணுவது, விவகாரங்களில் ஸ்திரத்தன்மை, குர்ஆனோடு இறுக்கமான தொடர்பு, நற்பண்பு, நல்லவற்றை ஏவுதல், தீயவற்றை விலக்குதல் முதலானவை பற்றி நான் உபதேசம் செய்கிறேன்.

"அல்லாஹ் கூறுகிறான் : தர்மம் கொடுக்கவும் நல்லதைச் செய்யவும் அல்லது மக்கள் மத்தியில் உறவுகளைச் சீர்செய்யவும் ஏவுவதைத் தவிர்த்து அவர்களது பேச்சுவார்த்தைகளில் எவ்வித உன்மையும் கிடையாது.

"அத்தோடு, எல்லாவித தீய காரியங்களில் இருந்தும் தவிர்ந்திருத்தலையும் போதிக்கிறேன். இரவுத் தொழுகை மிக முக்கிமானது. அதனைக் கடைப்பிடித்து வாருங்கள். யார் இரவுத் தொழுகையில் பொடுபோக்காக நடந்து கொள்கிறாரோ அவர் நம்மைச் சேர்ந்தவர் அல்லர்.

"எனது இந்தப் போதனைகளைத் தாங்களும் கருத்திற் கொண்டு நடைமுறைப்படுத்துமாறு கட்டளையிடுங்கள். அவர்கள் தம் கடமைகளைத் தெரிந்து கொள்வார்கள். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். இறுதி இமாம் வெளிப்படுவதை எதிரபார்த்துப் பொறுத்திருங்கள்.

“நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி, கூறினார்கள்: எனது உம்மத்தினரின் அதிசிறந்த வணக்கம் விடுதலையை எதிரபார்த்திருப்ப தாகும். அநியாயமும் குழப்பமும் நிறைந்த உலகில் நீதியையும் நியாயத்தையும் நிலை நிறுத்துவதற்கு நபிகளார் வாக்களித்த பிரகாரம் எனது மகன் தோன்றும் வரைக்கும் நமது நேசர்கள் கவலையோடு தான் இருப்பார்கள்.

“மதிப்புக்கும் விசுவாசத்துக்கும் உரிய அபுல் ஹஸன் அவர்களே, தாங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பதோடு நமது நேசர்களுக்கும் பொறுமையைப் பற்றிப் போதனை செய்யுங்கள். நிச்சயமாக பூமி அல்லாஹ்வுக்குரியது. இறையடியார்களில் அவன் நாடியவரை இதற்கு வாரிசாக ஆக்குவான். இறையச்சம் கொண்டோரின் முடிவு சிறப்பானதாகும்.

“உங்கள் மீதும் நம் நேசர்கள் எல்லோர் மீதும் ஸலாமும் அல்லாஹ்வின் அருளும் அருட்கொடைகளும் பொழியட்டும். அல்லாஹ்வே போதுமானவன். அவனே சிறந்த பாதுகாவலன்,சிறந்த எஜமான். சிறந்த உதவியாளன். (31)

அற்புதங்கள்

இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் தமது தந்தையர் போன்று அல்லாஹ்வுடனும் மலக்குகளுடனும் நமக்குப் புலப்படாத உலகுடனும் தொடர்புளைக் கொண்டிருந்தார்கள். அன்னாரது இமாமத்தின் அந்தஸ்துக்குப் பொருத்தமான வகையில், விடயங்களை அறிந்து வைத்திருந்தார்கள். இமாமின் வாழிவில் நிகழ்ந்த அற்புதங்கள் பற்றி அறிவிப்புகள் நிறையவே காணப்படுகின்றன. விரிவஞ்சி சில உதாரணங்களை மட்டும் இங்கு தருகிறோம்.

அபூ ஹாசிம் ஜஃபரீ கூறுகிறார்:

ஒரு முறை நான் இமாம் அஸ்கரீயிடம் சென்றேன். பரக்கத்துக்காக ஒரு மோதிரத்தைச் செய்வதற்குரிய அளவு கொஞ்சம் வெள்ளி தருமாறு கோர வேண்டும் என்ற எண்ணமும் என்னுள் இருந்தது.

நான் சென்று முகமன் பரிமாறி உட்கார்ந்து அளவளாவினேன். இறுதியாக நான் வெளியே வர எழுந்து நின்றேன். என்னிடம் இமாம் அலைஹிஸ்ஸலாம் ஒரு மோதிரத்தை நீட்டினார்கள். பின்னர் கூறினார்கள். 'நீங்கள் வெள்ளி தான் விரும்பினீர்கள் நாம் மோதிரமே தருகிறோம். உருக்கி வடிவமைக்கும் வேலை கிடையாது தானே. அபூ ஹாசிம்! உம்மை வாழ்த்துகிறேன்.”

நான் கூறினேன்.'என் எஜமானே, தாங்கள் அல்லாஹ்வின் நெருங்கிய நேசரும் நான் வழிபடும் என் இமாமும் ஆவீர்கள் என்று சாட்சியம் கூறுகிறேன்.”

'அபூ ஹாஷிம்! உனக்கு அல்லாஹ் மன்னிப்பை அருளுவானாக.' என இமாம் பிரார்த்தித்தார்கள். (32)

அபூ ஹாஷிம் தாவூத் இப்னுல் காஸிம் அறிவிக்கிறார்:

நான் ஸாலிஹ் இப்னு வஸீப் அல் அஹ்மர் என்பவரின் சிறைக் கூடத்தில் அடைப்பட்டிருந்தேன். என்னுடன் ஹஸன் முஹம்மத் அல் அகீகீ, முஹம்மத் இப்னு இப்ராஹீம் உமரீ மற்றும் பலர் இருந்தனர்.

இமாம் அஸ்கரீயும் அவரது சோதரர் ஜஃபரும் அதே சிறைக்கு கொண்டு வரப்பட்டனர். நமது சிறைக்கூடப் பொறுப்பாளர், இமாமுக்குப் பணிவிடை செய்ய நமக்கு சலுகை வழங்கியிருந்தார். நம்முடன் ஜுமைஹீ என்றழைக்கப்படும் ஒருகைதியும் இருந்தார். அவரும் அலவீதான் எனப் பலர் கூறினர்.

இமாம் அலைஹிஸ் ஸலாம் எம்மிடம், 'எங்களைச் சேராத ஒருவர் இங்கு இருக்கிறார். இல்லாவிட்டால் உங்கள் விடுதலை பற்றி நான் அறிவிப்பேன்' எனக் கூறினார்.

ஜுமைஹீ வெளியே சென்றதும் இமாம் அலைஹிஸ்ஸலாம் கூறினார்கள்: 'இவர் உங்களைச் சேர்ந்தவர் அல்ல. அவரைப் பற்றி மிகவும் கவனம் தேவை. அவருடைய உடைக்குக் கீழால் அவர் தொகுத்த அறிக்கை இருக்கிறது. அவற்றை சுல்தானுக்கு கொடுக்கவே எழுதியுள்ளார்.'

நம்மில் சிலர் ஜுமைஹீயைச் சோதனையிட்ட போது இமாம் சொன்ன பிரகாரம் அறிக்கை கிடைத்தது. (33)

முஹம்மத் இப்னுல் றபீஉ சைபானீ அறிவிக்கிறார்:

நான் அஹ்வாஸில் இருக்கும் போது அத்வைதக் கொள்கை உடைய ஒருவருடன் வாதிட்டேன். அவர் சொன்ன சில விடயங்கள் என் உள்ளத்தை உருத்தின. அவை சரியாக இருக்குமோ என்று கூட நான் சிந்தித்ததுண்டு.

நான் சாமர்ராவுக்கு வந்து அஹ்மத் இப்னு ஹுழையின் வீட்டருகில் அமர்ந்திருந்தேன். இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் அந்தப் பக்கமாக வந்தார். என்னைக் காண்டதும் தமது சுட்டு விரலை நீட்டி, 'இறைவன் ஒருவன் தான் என்ற கொள்கையே சரியானது. அதில் உறுதியாக இரும்'எனக் கூறினார்கள்.

‘என்னால் வியப்புத் தாங்க முடியவில்லை நான் மயங்கி விழுந்து விட்டேன்” (34)

இஸ்மாயீல் இப்னு முஹம்மத் கூறுகிறார்.

நான் ஒரு முறை இமாம் அஸ்கரீயிடம் வந்தேன். அவர் வெளியே வரும் வரை வீட்டு வாசலில் காத்திருந்தேன். அவர் வந்ததும் முன்னேசென்று முகமன் கூறினேன். என்னுடைய தேவையைக் கூறி ஒரு திர்ஹம் கூட இப்போது என்னிடம் இல்லையென சத்தியம் செய்து கூறினேன்.

இமாம் சொன்னார்: “இரு நூறு தீனாரைப் புதைத்து வைத்து விட்டு ஒரு சதக் காசு இல்லையென்கிறாய். சத்தியம் வேறு பண்ணுகிறாய். பரவாயில்லை நாம் தருவதைக் குறைக்க மாட்டோம்.'

பின்னர் தன் பணியாளை அழைத்து என்னிடம் நூறு திர்ஹம் தரும்படி பணித்தார்கள். நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறினேன். திரும்பி வர எத்தனித்த போது இமாம் என்னிடம், "அந்த இரு நூறு தீனாரும் உனக்குத் தேவையான ஒரு சந்தர்ப்பத்தில் காணாமல் போய் விடுமோ என்று அஞ்சுகிறேன்' என எச்சரித்தார்கள்.

வீடு திரும்பிய நான் அப்பணத்தைத் தோண்டி எடுத்து வேறு ஓரிடத்தில் புதைத்தேன். அதனை நன்கு கண்காணித்து வந்தேன்.

ஒரு முறை எனக்குத் தேவை ஏற்பட்ட போது தோண்டிப் பார்த்தேன். பணத்தைக் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. நான் மிகவும் கஷ்டப்பட்டேன். எனது பிள்ளைகளில் ஒருவர் அதனைத் தோண்டி எடுத்துச் சென்றதைப் பின்னர் அறிந்தேன். எனக்கோ அதில் எதுவும் கிடைக்கவில்லை. (35)

முஹம்மத் இப்னு அய்யாஷ் கூறுகிறார்:

நாம் இமாமின் மகத்துவத்தையும் அவரது அற்புதங்களையும் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தோம். நம்மோடிருந்தவர்களில் ஒருவர் இமாம் அலைஹிஸ் ஸலாம் மீது நம்பிக்கையற்றவர். அது மட்டுமன்றி அஹ்லுல் பைத்தினரை வெறுத்துப் பகைப்பவரும் கூட.

அவர் குதர்க்கமாகச் சொன்னார் : "நான் மையில்லாமல் எழுதும் கடிதத்துக்கு உங்கள் இமாம் பதில் தந்தால் நீங்கள் சொல்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியும்."

நாமும் பரீட்சிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்தோம். அவர் மையில்லாமல் வெறும் காகிதத்தில் எழுதினார். அதனை நாம் இமாமுக்கு அனுப்பினோம்.

சிறிது நாள் கழிந்து பதில் வந்தது. தமக்கு வந்த அதே எழுத்தில்லாத காகிதத்தில் எழுதியவரின் பெயர், அவரது பெற்றோர் விபரமும் குறிப்பிடப்பட்டு பதில் வரையப்பட்டிருந்தது.

பதிலைக் கண்டவர் திடுக்கிட்டு மயங்கினார். கண் விழித்து தெளிவு பெற்றதும் உண்மையை ஏற்றுக் கொண்டார்." (36)

அம்ர் இப்னு அபூ முஸ்லிம் சொல்கிறார்:

எனது அயல் வீட்டில் இருந்தவரினால் தொல்லை தாங்க முடியவில்லை. எனது வீட்டோடு சேர்த்தே அவரின் வீடும் இருந்தது.

இந்த இன்னலில் இருந்து விடுபட வழி சொல்லக் கேட்டு இமாம் அஸ்கரீக்கு கடிதம் எழுதினேன். பதில் கடிதத்தில், எனக்காகப் பிரார்த்திப்பதாகவும் இந்தத் தொல்லையில் இருந்து கூடிய விரைவில் வமோசனம் கிடைக்கும் எனவும் அவ்வீட்டுக்கு நீயே உரிமை கொள்வாய் என்றும் வரைந்திருந்தார்.

ஒரிரு மாதங்களில் அயல் வீட்டில் இருந்தவர் மரணித்தார். உறவினர்கள் அவ்வீட்டை எனக்கே விற்றனர். நான் இமாமின் பரக்கத்தால் வீட்டை இணைத்து பெரிதாக்கிக் கொண்டேன்." (37)

அபூ ஹம்ஸா நஸீருல் காதிம் சொல்கிறார்:

“இமாம் அஸகரீ அலைஹிஸ் ஸலாம் தமது பணியாளர்களுடன் அவரவர் மொழியில் பேசுவது எனக்கு வியப்பளித்தது. துருக்கிய, ரோம, கிரேக்க மொழிகளில் அவர் உரையாடுவது அதிசயமாக இருந்தது. அவரோ மதீனாவில் பிறந்தவர் அல்லவா என நினைத்தேன்.

இமாம் வருவதை யாரும் அவதானிக்கவில்லை, நானும் கூட. என்னருகில் வந்து சொன்னார்:“அல்லாஹ்; அவனது பிரதிநிதியை ஏனையோரை விட வேறுபடுத்திக் காட்ட சில நி·மத்துகளை வழங்கியுள்ளான், அவருக்கு எல்லா விவகாரங்கள் பற்றியும் அறிவை வழங்கியுள்ளான். மொழியை,பரம்பரையை, சங்கதிகளை எல்லாம் அறிந்து வைத்திருப்பர். இல்லாவிட்டால் அல்லாஹ்வின் பிரநிதிநிதிக்கும் மற்றையோருதுக்கும் வேறுபாடு இருக்காது அல்லவா? (38)

பொன் மொழிகள்

1. “சிக்கனமாய் இருங்கள், விரயம் வேண்டாம்.” (39)

2. சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். சிறுவராக இருந்த இமாம் அஸ்கரீ இவர்களைப் பார்த்து அழுது கொண்டிருந்தார். இதனைக் கண்ட பஹ்லூல் தனக்கும் விளையாட்டுப் பொருள் கிடைக்க வேண்டுமென இவர் அழுவதாக நினைத்து, 'உமக்கும் விளையாட ஒரு பொம்மை வாங்கித் தரட்டுமா?' எனக் கேட்டார்.

இமாம் அலைஹிஸ் ஸலாம் கூறினார்: “அறிவில்லாதவனே! நாம் விளையாடவா படைக்கப்பட்டுள்ளோம்.

'பிறகு எதற்காகப் படைக்கப் பட்டுள்ளோம்?' பஹ்லுல் கேட்டார்.

'அறிவுக்காகவும் இபாதத்துக்காகவும்'.

'இதை எங்கிருந்து தெரிந்து கொண்டீர்கள்'

'நாம் உங்களை வீணாகப் படைக்க வில்லை. மேலும் நம்மிடமே நீங்கள் திரும்பி வருவீர்கள்' (40)என்று இறைவன் கூறுகிறானே.”

3. “இழிசொல் பேசாதே. உன் கண்ணியம் போய்விடும். கேலி செய்யாதே, உன்னையுமபழிப்பார்கள்.” (41)

4. “கடந்து செல்லும் ஒவ்வொருவருக்கும் ஸலாம் சொல்வதும் சபையில் ஒதுங்கி அமர்வதும் பணிவைக் காட்டும்” (42)

5. “உள்ளம் உற்சாகமாகும் போது அதற்கு வழிவிடுங்கள். வெறுப்புண்டானால் விலக்கி விடுங்கள்”(43)

6. “துக்கத்திலுள்ளோரிடம் மகிழ்ச்சியை காட்டுவது பண்பான செயல் அன்று.”(44)

7. “பணிவு என்பது பொறாமை கொள்ளப்படாத அருட்கொடை யாகும்.” (45)

8. “இரகசியமாக தன் சகோதரனை உபதேசித்தவன் அவனை மதித்தான். பகிரங்கமாகப் போதித்தவன் அவனைப் பழித்தான்” (46)

9. “மற்றவர்களிடமிருந்து தான் வெறுப்பதை தானும் செய்யாதிருப்பது உனக்குப் போதுமான் பண்பாடாகும்.” (47)

10. “அழகிய தோற்றம் வெளிப்படை அழகாம். நல்ல சிந்தனை அந்தரங்கத்தின் அழகாம் .” (48)

11. “இறைவனை அடைதல் ஒரு நீண்ட பயணமே. இரவில் விழித்திருக்காது அந்த இலக்கை அடைய முடியாது.” (49)

12. “தீமைகளின் வீட்டுக்கு பொய் திறவுகோள் ஆகும்.” (50)

13. “கொடைக்கும் மட்டுமுண்டு, மீறினால் விரயம் ஆகும்.” (51)

14. “பொறுமைக்கும் எல்லையுண்டு. மீறுவது கோழைத்தனம்.‖ (52)

தோழர்கள்

இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம், குறிப்பிட்டளவு தோழர்களையே கொண்டிருந்தார்கள். இமாம் மீதும் சமூகத்தின் மீதும் திணிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகளும் கண்காணிப்புகளுமே இதற்குக் காரணம். அவ்வாறு இமாமுடன் நெருங்கியிருந்த தோழர்கள் தலைசிறந்த மகான்களாகவும் இறையச்சத்தில் உயர்ந்த நேசர்களாகவும் விளங்கினர். அவர்களுள் சிலர் வருமாறு:

அஹமத் இப்னு இஸ்ஹாக் அல் அஷ்அரீ அல் கும்மீ

இவர், இமாமுக்கு மிக நெருக்கமானவரும் அன்னாரது பிரதிநிதியாகவும் ஆவார். கும் பிரதேச முக்கியஸ்தரான இவர் அப்பிரதேச மக்களின் கேள்விகளை இமாமிடம் சுமந்து சென்று பதில் பெற்றுக் கொண்டு வருவார். இமாம் ஜவாதுடனும் இமாம் ஹாதியுடனும் நெருக்கமாக இருந்த இவர் அவர்களின் ஹதீஸ்களையும் அறிவித்துள்ளார். (53)

இமாம் மஹ்தி சிறிது காலம் மறைந்திருந்த காலத்தில் அன்னாரின் மூன்றாவது பரதிநிதியாக இருந்த பெரியார் ஹுஸைன் இப்னு ரூஹ், கும்மீக்கு - ஹஜ் செல்ல அனுமதி கேட்டு - கடிதம் வரைந்தார். பெர்யாரும் பதில் கடிதத்தோடு ஒரு ஆடையையும் அனுப்பியிருந்தார்.

'என் இதயம் எனக்கு மரணச் செய்தி சொல்கிறது' என்று கூறிய வண்ணமே ஹஜ்ஜுக்கு சென்றார்,திரும்பி வரும் போது ஹல்வான் எனுமிடத்தில் மரணித்தார். (54)

அஹமது இப்னு இஸ்ஹாக்கின் மரணம் பற்றி ஸஃது இப்னு அப்துல்லாஹ் கூறுகிறார்: ஹல்வானில் இருந்து மூன்று பர்ஸக் தூரத்தில் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. பின்னர் கடுமையாக நோய்வாய்ப் பட்டார். நாம் நம்பிக்கையிழந்து விட்டோம்.

ஹல்வானை அடைந்ததும் அங்கு இரவு தங்கினோம். நான் தனியாக இருக்க வேண்டும் என்றார். நாங்கள் நமது இடங்களுக்குச் சென்று தூங்கினோம். அதிகாலையில் நான் அவரைப் பற்றிச் சிந்தித்தேன் மிகக் குழம்பிப் போயிருந்தேன்.

கண் விழித்த போது இமாம் அஸ்கரீயின் பணியாளர் ஒருவர் கற்பூரத்தோடு நின்று கொண்டிருந்தார். 'உங்கள் கவலைக்கு அல்லாஹ் கூலி தருவான். உங்களின் விருப்பத்துக்குரியவர் சென்று விட்டார். இறைவன் வேறொருவரால் அவ்விடத்தை நிரப்புவானாக' எனப் பிரார்த்தித்தார்.

பின்னர் கூறினார் : உங்கள் நன்பர் அஹ்மதின் ஜனாஸா குளிப்பாட்டி கபனிடப்பட்டு விட்டது. எழுந்து சென்று அடக்கம் செய்யுங்கள், அல்லாஹ்வுடன் அவருக்கிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாக தாங்கள் எல்லோரை விடவும் உங்கள் எஜமானிடத்தில் மதிப்பு பெற்றார்.' பின்னர் அந்தப் பணியாளனைக் காணவில்லை. (55)

அபூ ஹாசிம தாவூத் இப்னுல் காஸீம்

ஹஸரத் ஜஃபர் இப்னு அபூ தாலிபின் -அலைஹிஸ் ஸலாம்- வழித் தோன்றல். (56) பக்தாதிலும் அவரது குடும்பத்திலும் அறிவில் விஞ்சியவர். இமாம்களிடத்தில் இவருக்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது. இமாம்களான ஜவாத், இமாம் ஹாதீ மற்றும் இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் மூவரையும் சந்தித்தவர். இமாம் மஹ்தியின் குறுகிய மறைவின் போது அவரது பிரதிநிகளாக இருந்தோரில் இவரும் ஒருவர்.

இமாம்கள் மீது அளப்பரிய நேசமும் பிரத்தியோக நெருக்கமும் கொண்டிருந்தார், இமாம்களிமிருந்து பெருந்தொகையான ஹதீஸ்களை அறிவித்துள்ளார். அவர் நூலொன்றையும் யாத்தார். அதை அடிப்படையாகக் கொண்டு பெரும் பெரும் ஷீயா அறிஞர்களும் கூட றிவாயத் செய்கின்றனர். (57)

சுதந்திரமாகப் பேசுகின்ற தைரியசாலியாக அபூ ஹாசிம் திகழ்ந்தார். அப்பாசிய ஆட்சியாளர் முஸ்தயீனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார் என்ற குற்றச்சாட்டில் யஹ்யா இப்னு உமர் ஸைதீ எனும் இறையச்சமும் ஞானமும் உள்ள பெரியார் கொலை செய்யப்பட்டார். அன்னாரது தலை சீவப்பட்டு, பக்தாத் கவர்னர் முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் இப்னு தாஹிரின் அவைக்கு கொண்டு வரப் பட்டது.

பலர் அங்கு வந்து இந்த வெற்றிக்காக கவர்னரை வாழ்த்தினர். அபூஹாஷிம் கவர்னரின் மாளிகைக்குச் சென்றார் 'கவர்னரே! நானும் உங்களை வாழ்த்த வந்தேன். நிச்சயமாக நபிகள் பெருமானார் உயிரோடிருந்தால் இந்த மனிதருக்காக கோபமுற்றிருப்பார்' என கர்ஜித்தார்.

கவர்னர் பதில் சொல்லவில்லை. (58)

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் அல் ஹுமைரீ

கும் நகர் முக்கியஸ்தர். இமாம் அஸ்கரீயின் மிக நெருங்கிய தோழர்களுள் ஒருவர். பல நூல்களை எழுதினார். அவரது 'குர்பல் அஸ்னாத்' எனும் நூல் இன்றும் ஷீயா சட்ட அறிஞர்களால் போற்றப்படுகிறது.

ஹிஜ்ரி 290ல் கூபா சென்றார் அங்கு மக்கள் அவரிடம் ஹதீஸ் கற்றனர். (59)

அபூ அம்ர் உஸ்மான் இப்னு ஸயீத் அல் உமரீ

இமாம் மஹ்தியின் குறுகிய மறைவின் போது, அன்னாரது முதலாவது பிரதிநிதியாகத் திகழ்ந்தார். இமாம் ஹாதீ, இமாம் அஸ்கரீ, இமாம் மஹ்தீ ஆகியோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெரியார்.

தனது பதினொரு வயதில் இருந்தே இமாம் ஹாதியுடன் வளர்ந்தார். மேற்படி இமாம்களின் மக்கள் தொடரபு விவகாரங்களைக் கவனித்து வந்தவர். இவர் பல காரமத்துக்களையும் கொண்டிருந்தார்.

இமாம் ஹாதீ, இமாம் அஸ்கரீ ஆகியோர் மக்களை அறிவு பெறவும் விளக்கம் பெறவும் இவரிடம் அனுப்பி வைத்தனர். இமாம் ஹாதீ அலைஹிஸ் ஸலாம் இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் இருவருமே இவரைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளானர்:

'அபூ அம்ர், உஸ்மான் இப்னு ஸயீத் எமது விசுவாசத்துக்குரியவர். அவர் ஹதீஸ் அறிவித்தால் நாம் சொன்னவற்றை மட்டுமே அறிவிப்பார். உங்களுக்கு அவர் ஏதும் சொன்னால் அது உங்களுக்கு எம்மிடமிருந்து வருவதாகும்” (60)

மரணம்

அஹ்லுல் பைத் இமாம்களின் தொகை பன்னிரண்டு என்பதையும் இறுதியானவர் பூமியில் கொடுங்கோன்மையை ஒழித்து நீதியை நிலை நாட்டுபவர் என்பதையும் அப்பாசியர் அறிந்து வைத்திருந்தனர்.

இந்த விடயம் ஆட்சியாளருக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. எனவே இந்த இமாம்களை விசேட கண்கானிப்பின் கீழ் வைத்திருந்தனர். கலீபாவோ இமாம் அஸ்கரீக்கு ஆண் பிள்ளை பிறக்கிறதா என்பதைத் துரவிக் கொண்டே இருந்தனர்.

இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் இதனால் பலமுறை சிறை செல்ல வேண்டியதாயிற்று. எனினும் இமாம் மீதான கட்டுப்பாடுகள் அன்னாரது புகழ் பரவ ஏதுவாகியமையை உணர்ந்தார் கலீபா. எனவே அவரைத் தீர்த்துக் கட்டும் முடிவுக்கு வந்தார்.

இரகசியமான முறையில் நஞ்சூட்டினர். ஹிஜ்ரி 260ல் றபீஉல் அவ்வல் எட்டாம் நாள் அன்னார் ஷஹீதானார் 'இமாமுக்கு நஞ்சூட்டிய விசயம் வெளியே வராமல் இருப்பதற்காக மு.ஃதமித் என்னென்னவோ செய்தார். அப்துல்லாஹ் இப்னு ஹாகான் எனும் பிரதானி சொன்னதாக இப்னு ஸப்பாக் மாலிகீ தனது அல் புஸூலுல் முஹிம்மா| எனும் நூலில் பின்வருமாறு விபரிக்கிறார்:

“இமாம் ஹஸன் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் மரணித்த போது அஹமத் இப்னு முதவக்கில் கலீபா மு∴தமிதிடம் வந்தார். இமாம் அஸ்கரீ நோயுற்றதால் அவரைக் கண்காணிக்க ஏற்பாடாகியது. மிக நம்பிக்கைக்குரிய பணியாளர்கள் இமாமின் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். இமாமின் நிலைமையைக் கண்காணிக்கவென அரச வைத்தியர்கள் சென்றனர். எல்லோரும் அவ்வீட்டில் நடப்பவற்றை உளவு பார்த்தனர்.

அதிக நம்பிக்கைக்குரிய பல பிரமுகர்கள் இமாமின் வீட்டுக்கு அழைத்துச் சென்று இமாம் நோய்வாய்ப்பட்டிருப்பதை அவர்களுக்கு காட்டுமாறு கலீபா, அப்போதைய காழி இப்னு பக்தியாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இமாம் அலைஹிஸ் ஸலாம் சில நாட்களில் மரணித்த போது சாமர்ரா அல்லோல கல்லோலப்பட்டது. அங்கு கியாமத் வந்தது போன்று காணப்பட்டது. ஜனாஸா ஆயத்தமான பேது கலீபா ஈஸா இப்னு முதவக்கிலை அனுப்பி தொழுகை நடாத்தச் சொன்னார். அவர் இமாமின் முகத்தை விலக்கிக் காட்டி, “இதோ அபு முஹம்மத் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் நோய் வாய்ப்பட்டு தம விரிப்பிலேயே உயிர் நீத்தார்” என அறிவித்தார். ஹிஜ்ரி 260 றபீயுல் அவ்வல் 8ம் நான் இம்மரணம் சம்பவித்தது.

இமாமின் ஷஹாதத்தைத் தொடர்ந்து, அன்னாரது சொத்துக்களை இமாமின் தாயார், சகோதரர் ஜ∴பர் ஆகியோர் மத்தியில் பிரித்துக் கொடுத்தார். கலீபா, இமாமுக்குப் பிள்ளை இல்லை என இதன் மூலம் நிரூபித்து அடுத்த இறுதி இமாம் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தவே இம் முயற்சி.

இமாம் மஹ்தியை அல்லாஹ் மறைத்துக் காப்பாற்றி வந்தான். இமாம் அஸ்கரீ வபாத்தான போது அவரது ஜனாஸாத் தொழுகையை நடாத்த இமாமின் சகோதரர் ஜ∴பர் முற்பட்டார். ஆனால் திடீரென முன் சென்ற இமாம் மஹ்தி தந்தையின் ஜனாஸாவைத் தொழுகையை நடாத்தினார். அதன் பின் மறைந்திருந்த தம் பிரதிநிதிகள் மூலம் மக்களோடு தொடரபுகளை ஏற்படுத்திக் கொண்டார்.

முடிவு

அடிக்குறிப்புகள்

.* அப்பாசிய ஆட்சியில் துருக்கிய படைப் பிரிவு முகாமிட்டிருந்த இடம் என்பதால் 'அல் அஸ்கர்'ராணுவத்தளம் என அழைக்கப்படுகிறது. (பார்க்க : ததிம்மத்துல் முக்தஸர் பீ அஹ்பாரில் பஷர்,பாகம் 1 பக்: 348.

(1) பிஹார் பா.50, ப. 235 - 239,325

(2) கமாலுத்தீன் 381

(3) கமாலுத்தீன் 383

(4) அல் இர்ஷாத், முபீத் ப.315

(5) அ∴லாமுல் வரா ப.370

(6) அல் இர்ஷாத், முபீத் ப.317

(7) ததிம்மதுல் முன்தஹா ப.252

(8) முரூஜுத் தஹப் பா.4 : ப.91

(9) பிஹார் பா.50 : ப.251

(10) முரூஜுத் தஹப் பா.4 : ப.91 - 95 ததிம்மதுல் முன்தஹா ப.254

(11) அல் இர்ஷாத், முபீத் ப.324

(12) ததிம்மதுல் முன்தஹா ப. 254 – 258

(13) ததிம்மதுல் முன்தஹா ப.268, முரூஜுத் தஹப் பா. 4 : ப.140 – 142

(14) மகாதிலுத் தாலிபீன் ப.675 – 690

(15) முரூஜுத் தஹப் பா.2 : ப.120

(16) அல் இரஷாத் லில் முபீத் பா.324, பிஹார் பா.50 : ப.330

(17) அல் இரஷாத் லில் முபீத் பா.324 – 325

(18) மஹ்ஜுத் த.ஃவாத் ப.275

(19) கஷ்புல் ஃகும்மா 3 : 307

(20) அல் இர்ஷாத், முபீத் ப.318

(21) பிஹார் பா.50 : ப.253

(22) உசூலுல் காபீ பா.1 : ப.506

(23) பிஹார் பா.50 : ப.304

(24) அல் இரஷாத், முபீத் ப.324

(25) இஹ்காகுல் ஹக் பா.12 :ப.464

(26) அல் மனாகிப், இபனு ஸஹ்று ஆசுப் பா.3 : ப.525

(27) அ.ஃலாமுல் வரா ப.374

(28) கஷ்புல் ஃகும்மா பா.3 :ப. 303

(29) கஷ்புல் ஃகும்மா பா.3 : ப.293 – 294

(30) கஷ்புல் ஃகும்மா பா.3 : ப.300

(31) அல் அன்வாருல் பஹிய்யா ப.161

(32) உஸூலுல் காபி பா.1 : ப.512

(33) அ.ஃலாமுல் வரா ப.373, நூறுல் அப்ஸார் ப.183

(34) கஷ்புல் ஃகும்மா பீ ம.ஃரிபதுல் அயிம்மா பா.3 :ப. 305

(35) இஹ்காகுல் ஹக் பா.12 : ப.470

(36) அல.; மனாகிப் நஜப் பிரதி 3 : 538

(37) கஸ்புல் ஹும்மா 3 : 302

(38) அல் இர்ஷாத், முபீத் ப.322

(39) இஹ்றகாகுல் ஹக் பா.12 : ப.467

(40) மே.கு. பா.12 : ப.473

(41) அல் அன்வாருல் பஹிய்யா மஷ்ஹத் அச்சு 160-161

(42) மே.கு. 160-161

(43) மே.கு. 160-161

(44) மே.கு. 160-161

(45) மே.கு. 160-161

(46) அல் அன்வாருல் பஹிய்யா மஷ்ஹத் அச்சு 160-161

(47) மே.கு. 160-161

(48) மே.கு. 160-161

(49) மே.கு. 160-161

(50) மே.கு. 160-161

(51) மே.கு. 160-161

(52) மே.கு. 160-161

(53) தன்கீஹுல் மகால் பா.1 : ப. 50

(54) இஹ்தியார் மஃரிபதுர் ரிஜால் ப.557

(55) முன்தஹல் ஆமால் ப.279

(56) ஜாமிஉர் ருவாத் பா.1 : ப. 307

(57) தன்கீஹுல் மகால் பா.1 : ப.412 – 413

(58) காமூசுர் றிஜால் 4: 59

(59) தன்கீஹுல் மகால் பா.2 : ப.174

(60) தன்கீஹுல் மகால் பா.2 : ப.245 - காமூசுர் றிஜால்;